# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.) [173 BNSS]

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129361

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

1. District : திருவாரூர்
மாவட்டம்
PS: V&AC திருவாரூர்
காவல்நிலையம்
Year: 2024
ஆண்டு
FIR No.: 2
மு.த.அ. எண்
Date: 16.8.2024
நாள் 16.8.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended 2018
Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்: as amended 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : வட்டாட்சியர் அலுவலகம் மன்னார்குடி
குற்ற நிகழ்வு நாள்
Date from : 5.8.2024 / 11.00
நாள் முதல்
Date to :
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை 12.8.2024 / 12.30

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 14.8.2024 / 10.45
நேரம்

(c) General Diary Reference : Entry No(s) [illegible] புகார்
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 14.8.2024 / 16.00
நேரம் 16.8.2024 / 07.00

FIR - 16.8.2024 / 08.00

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typing

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : 25 km மேற்கு மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகம்
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. பெ. சக்திவேல்
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர் s/o கோவிந்தராஜன்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு 53
(d) Nationality :
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம் க. எண். 29/14
(f) Occupation :
தொழில் விவசாயம்
(g) Address : மாரியம்மன் கோவில் தெற்கு தெரு கீழப்பாலம் மன்னார்குடி. திருவாரூர் (DT)
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. நாகராஜன், பணியில் துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம் மன்னார்குடி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.G.R.சித்ரா ஆகிய நான் 16.08.2024-ந் தேதி காலை 7.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.சக்திவேல் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் G.சக்திவேல், த/பெ. கோவிந்தராஜன், க.எண்.29/14, மாரியம்மன்கோவில் சன்னதி தெரு, கீழப்பாலம், மன்னார்குடி (தாலுக்கா), திருவாரூர் மாவட்டம், பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, கீழப்பாலம், மாரியம்மன்கோவில் சன்னதி தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். எனது மனைவி பெயர் திருமதி. சித்ராரேவதி. நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். நான் தற்போது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. Sakthivel.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 16/8/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.R. சித்ரா
Rank: நிலை..................No. எண் .......... 0
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு
பிரிவு. திருவாரூர்

(குற்ற எண். 02/2024 FIR-ன் தொடர்ச்சி...,)

கான்ராக்டர் பணி மேற்கொள்வதற்காக மன்னார்குடி கரூர் வைசியா பேங்கில் வைத்துள்ள எனது கணக்கு எண்ணில் OD amount கூடுதலாக வைக்க வேண்டியிருந்ததால் எனது மனைவி திருமதி.சித்ரா ரேவதி பெயரில் உள்ள விட்டு மனை பத்திரத்தை கரூர் வைசியா பேங்கில் கொடுத்தேன். மேற்படி பேங்கில் பத்திரத்தையும், TSLR சரிபார்த்தபோது மன்னார்குடி தாலுக்கா, முதல்சேத்தி கைலாசநாதர் வார்டு புல எண். 1237/5ல் பட்டாதாரர் பெயர் சித்ரா ரேவதி என்பதற்கு பதிலாக சித்ரா தேவி என தவறாக உள்ளது தெரியவந்ததால் பேங்கில் பட்டாவில் பெயர் மாற்றம் செய்து வருமாறு கூறிவிட்டனர். எனவே பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய வேண்டி எனது மனைவி பெயரில் கடந்த 03.08.2024ந் தேதி ஆன்லைனில் அப்ளை செய்து 2024/0153/20/002156 நம்பர் கொடுக்கப்பட்டது. 05.08.2024 தேதியன்று சுமார் 11.00 மணியளவில் நான் மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டல துணை வட்டாட்சியர் திரு.நாகராஜன் என்பவரை சந்தித்து பட்டா பெயர் மாற்றம் குறித்து கேட்டேன். அதற்கு அவர் எனது மனு மற்றும் ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் ரூ.15,000/- செலவு ஆகும் என்று லஞ்சமாக பணம் கேட்டார். நான் வந்து உங்களை பார்க்கிறேன் என்று கூறி வந்துவிட்டேன். பின்னர் 12.08.2024-ந் தேதி ஆன்லைனில் எனது அப்ளிக்கேசன் ஸ்டேட்டஸ் பார்த்த போது அது மண்டல துணை வட்டாட்சியரிடம் நிலுவையில் இருப்பது தெரியவந்தது. எனவே அன்றையதினம் சுமார் மதியம் 12.30 மணியளவில் மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டல துணை வட்டாட்சியர் திரு.நாகராஜனை சந்தித்து ஏன் சார் இன்னும் பட்டாவில் பெயர் மாற்றம் செய்யவில்லை, பேங்கில் கொடுக்க எனக்கு பட்டா மிகவும் அவசரமாக தேவைப்படுகிறது என்று கூறினேன். அதற்கு அவர் நான் கேட்ட ரூ.15,000/- லஞ்சபணம் எடுத்து வந்துள்ளீர்களா என்று கேட்டார். அவ்வளவு தொகை என்னிடம் இல்லை தொகையை குறைத்துக்கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் தொகையை குறைக்க முடியாது நான் கேட்ட லஞ்ச பணம் ரூ.15,000/- பணத்தை எடுத்துவந்தால் தான் பட்டாவில் பெயர் மாற்றம் செய்து தருவேன் என்று தெரிவித்தார். தொகையை தயார் செய்து கொண்டு தங்களை வந்து பார்க்கிறேன் என்று கூறி வந்து விட்டேன். பின்னர் 14.08.2024-ந் தேதி சுமார் 10.45 மணிக்கு மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டல துணை வட்டாட்சியர்

(குற்ற எண். 02/2024 FIR-ன் தொடர்ச்சி...,)

திரு.நாகராஜனை சந்தித்து அவ்வளவு தொகையை என்னால் தயார் செய்ய இயலவில்லை தொகையை குறைத்துக்கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் நான் கேட்ட லஞ்ச பணத்தில் ரு.3000/-த்தை குறைத்துக்கொண்டு ரு.12,000/-தை உடனே எடுத்துவாருங்கள் நான் பட்டாவில் பெயர் மாற்றம் செய்து இன்றே தருகிறேன் என்று கூறினார். நான் சரி என்று சொல்லிவிட்டு விட்டிற்கு வந்துவிட்டேன். அன்று மதியம் 01.20 மணிக்கு எனது மனுவானது மன்னார்குடி மண்டல துணை வட்டாட்சியரால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று குறுச்செய்தி எனது செல்போனிற்கு வந்தது. அதனால் நான் மாலை சுமார் 4.00 மணிக்கு வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டல துணை வட்டாட்சியர் திரு.நாகராஜனை சந்தித்து எனது மனு நிராகரிக்கப்பட்டது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் எனக்கு வந்த குறுஞ்செய்தியை பார்த்துவிட்டு, ஆன்லைனில் தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டு நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த மற்றும் முறையாக பதிவேற்றம் செய்யப்படாத மனுக்களை நிராகரிக்கச் சொல்லி அலுவலகத்தில் சொல்லியிருந்ததாகவும், அப்போது தவறுதலாக உங்கள் மனுவையும் நிராகரித்திருப்பார்கள் என தெரிவித்தார். மேலும் நீங்கள் புதியதாக ஆன்லைனில் அப்ளை செய்துவிட்டு நான் கேட்ட லஞ்சபணம் ரு.12,000/- எடுத்துக்கொண்டு வாருங்கள் நான் உங்களுக்கு உடனே பட்டா பெயர் மாற்றம் செய்து தருகிறேன் என்று மீண்டும் என்னிடம் லஞ்ச பணம் கேட்டார். எனவே நான் புதிதாக 14.08.2024-ந் தேதி அப்ளிகேசன் நம்பர்.2024/0153/20/002267 ன்படி பட்டாவில் பெயர் மாறுதல் வேண்டி அப்ளை செய்துவிட்டு திரு. நாகராஜனிடம் தகவல் தெரிவித்தேன், அதற்கு அவர் நாளை விடுமுறை என்பதால் 16.08.2024-ந் தேதி நான் கேட்ட லஞ்சபணத்துடன் வாருங்கள் பட்டாவில் பெயர் மாற்றம் செய்து ஆணை வாங்கி கொள்ளலாம் என தெரிவித்தார். நான் சரி என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய ரு.12,000/- லஞ்ச பணம் கேட்டு பலமுறை என்னை அலையவிட்டதனால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய லஞ்சபணம் கேட்டதை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட மன்னார்குடி, மண்டல துணை வட்டாட்சியர் திரு.நாகராஜன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு புகாரினை தயார் செய்து கொண்டு அவர் லஞ்சமாக கேட்ட ரு.12,000/- பணம் மற்றும் ஆவண எண்.515/2008, புல எண்.1237/5-க்கான Extract from the town survey

(குற்ற எண். 02/2024 FIR-ன் தொடர்ச்சி...,)

land register certificate, Online Application No.2024/0153/20/002156 and 2024/0153/20/002267 ஆகியவற்றின் நகல்களை இணைத்து புகார் அளிக்கிறேன். எனது புகார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd (xxxxxxxxxxx) G.சக்திவேல் (16.08.2024) Sir, Received and perused the complaint, In this connection, Tmt.G.R.Chitra, Inspector of Police, V&AC, Thiruvarur is instructed to verify the content of this complaint and reputation of the suspect officer and proceed as per law Sd. (XXXXXXXXX) (B.Poorani, DSP, V&AC, TVR) அய்யா, மேற்படி புகாரின் பேரில் உத்தரவுபடி எதிரி மீது முன்விசாரணை செய்து இப்புகார்மனு மீது திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2024 ச/பி 7 of Prevention of Corruption Act 1988 as amended 2018-ன் படி 16.08.2024-ந் தேதி காலை 08.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd (XXXXXX) 16.08.2024 G.R.சித்ரா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர்.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு
திருவாரூர் 16/8/2024